[1975 அக்டோபர் 24

## உணவுப் பொருள் கடத்தல் குறித்த தகவல்

*35 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :
திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 ஆகஸ்டு மாதம் முதல் கடத்தல் உணவுப் பொருளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டம் ஏதேனும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) நமது மாநில எல்லைகள் மூலம் இன்றியமையாப் பொருள்கள் கடத்தப்படவிருப்பதாகத் தகவல் கொடுத்தால் கைப்பற்றப்பட்ட பொருள்களின் மதிப்பில் 25 சதவிகிதம் தகவல் கொடுத்தவர்களுக்கு வெகுமதியாக வழங்கப்படும்.

மாநில எல்லைப் பகுதிகள் அல்லாத ஏனைய உள்நாட்டுப் பகுதிகளில் பதுக்கல், சட்ட விரோதமான கடத்தல் போன்ற செயல்கள் பற்றி தகவல் கிடைத்து கைப்பற்றப்பட்ட பொருள்களின் மதிப்பில் 10 சதவிகிதம் தகவல் கொடுத்தவர்களுக்கு வெகுமதியாக அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

தகவல் கொடுப்போர், பொது மக்கள், உணவுப் பொருள் வழங்கு துறையினர், காவல் துறையினர் எவராக இருப்பினும் வெகுமதி வழங்கப்படுகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இந்தக் கடத்தல் உணவுப் பொருட்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுவதைத் தவிர்த்து பிடிக்கப்பட்ட பொருட்களில் ஒரு பகுதியைப் பரிசாக வழங்கலாமே, இதை அரசு பரிசிலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, உணவுப் பொருட்கள் பற்றுக்குறை. ஆகவே, அவை நாட்டுக்குத் தேவை.

*1975 அக்டோபர் 24]*

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, இந்தப் பரிசுத் திட்டத்தின் மூலமாக அரசுக்கு எதிர்பார்த்த பலனுக்கு அதிகமாக கிட்டியிருக்கிறதா என்பதையும், அப்படியானால் இதை மேலும் விரிவுபடுத்துவதற்கு அரசு நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளவிருக்கிறதா என்பதையும் அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இதன் மூலமாக ஏராளமான நெல்லும், அரிசியும் அரசாங்கத்தின் கைக்கு வந்திருக்கிறது.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, இந்தத் தகவல் கொடுப்பவர்களைப் பற்றி இடையிலே யாராவது சொல்லிவிட்டால் அவர்களுக்கு ஏற்படுகிற தொல்லைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்குச் சரியான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, தகவல் முறையில் கேள்வி அமைந்துள்ளது. அவர்களை நிச்சயமாக கொடுப்பவர்களைக் காட்டிக் கொடுக்காமல் இருப்பது நல்லது என்று காவல் துறை பாதுகாக்கும்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister the quantum of foodgrains got from the information and the amount disbursed so far to those who have given information?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டு 39,118 குவிண்டால் நெல், 24,854 குவிண்டால் அரிசி, 1,335 குவிண்டால் சிறு தானியங்கள். மொத்தம் 70 ஆயிரம் ரூபாய் 1974 இல் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்த சோதனைச் சாவடிகளிலே பல சாவடிகளில் ஒரு ஆள் மட்டும் தனியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அந்தச் சாவடிகளிலே கடத்தப்படுகிறது. அவைகளைப் பலப்படுத்துவதற்கு ஏற்பாடுகளை அரசாங்கம் செய்திருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இப்போதே கடத்தல் குற்றங்களுக்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.